# இலங்கை தன்னார்வத் தொண்டு தொடர்பிலான தேசியக் கொள்கை

## 1. அறிமுகம் மற்றும் முன்னுரை

நாட்டின் சமூக -பொருளாதார மேம்பாடு, பொதுநலன் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் செயல்முறைகளில் குடிமக்களின் தன்னார்வ மற்றும் தீவிரப் பங்களிப்பினை மேம்படுத்துவதற்கும் மற்றும் அதனை முறைசார்படுத்துவதற்கும் இலங்கை அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

இலங்கையில் தன்னார்வப் பணி என்பது ஒரு நவீன எண்ணக்கரு மட்டுமன்றி, எமது கலாசார மரபு, சமூக உணர்வு மற்றும் சமய விழுமியங்களில் ஆழமாக வேரூன்றிய ஒரு மதிப்புமிக்க நடைமுறையாகும் என்பதுடன், "சிரமதானம்" மற்றும் "பிறர் நலன் பேணும் பண்பு போன்ற உள்ளூர் மரபுகளினூடாக செழுமைப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு நாட்டின் நிலையான சமூக-பொருளாதார வளர்ச்சி, பொதுநலன் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் செயல்முறைகளினை விரைவுபடுத்துவதில் குடிமக்களின் தன்னார்வப் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும்.

தற்போதைய உலகளாவிய சூழலிலும் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி இலக்குகளினை (SDGs) அடைவதற்கான நோக்கத்துடனும், இந்தத் தன்னார்வ உழைப்பு மற்றும் நிபுணத்துவத்தினை, மிகவும் முறைசார்படுத்தி, திட்டமிட்டு பயனுள்ள வகையில் தேசிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்களிப்புச் செய்வது அரசின் முதன்மையான எதிர்பார்ப்பொன்றாகும்.

இதுவரை இலங்கையில் தன்னார்வ அமைப்புக்களினை ஒழுங்குபடுத்துவதற்கும் மற்றும் ஒருங்கிணைப்பதற்கும் 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கத் தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் (பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்) சட்டமே முதன்மையான சட்டமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தினூடாக தன்னார்வ அமைப்புக்களினைப் பதிவு செய்தல் மற்றும் அரச மட்டத்தில் ஒழுங்கமைப்பதற்கு வலுவான சட்ட அடிப்படையொன்றினை வழங்கியுள்ளதுடன், இது நாட்டின் தன்னார்வத் துறையின் முன்னேற்றத்திற்கென கிடைத்துள்ள முக்கியமான சட்டபூர்வமான பங்களிப்பொன்றாகும்.

21 ஆம் நூற்றாண்டில் வளர்ந்துவரும் சமூக-பொருளாதாரச் சவால்கள், பேரிடர் முகாமைத்துவம் மற்றும் இளைஞர் சமூகத்திடமுள்ள செயற்றிறன் ஆகியவற்றை மேலும் திறம்பட வெற்றிகரமாக நிர்வகிக்கும் பொருட்டு, 2019.07.19 ஆந் திகதிய 19/2059/132.023 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வத் தொண்டுக்கான தேசியக் கொள்கையினை மேலும் வலுப்படுத்தித் தேவையான திருத்தங்களினைச் சேர்ப்பது அத்தியாவசியமான விடயமொன்றாக உள்ளது. அதன் பிரகாரம், இலங்கையின் தன்னார்வத் தொண்டு தொடர்பிலான தேசியக் கொள்கையினை, தற்போதைய சட்ட ஏற்பாடுகள் மற்றும் நவீன தேவைகளினை ஒன்றுடன் ஒன்று ஒருங்கிணைத்து தன்னார்வத் தொண்டினை தேசியளவில் மேம்படுத்துவதற்கும், தன்னார்வலர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்படக்கூடிய ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகவும் இது அமைகிறது.

இத் தேசியக் கொள்கையானது பின்வரும் அடிப்படைக் கொள்கை வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டது :

- தன்னார்வச் செயற்பாடுகளினை செயலாக்கும்போது ஆகக்குறைந்த செலவு மாத்திரமே ஈடுசெய்யப்படுவதை உறுதிப்படுத்துதல்.

- சமூகம் மற்றும் நாட்டின் முன்னேற்றத்திற்காக உரிய சகல அரச, தனியார் மற்றும் சிவில் அமைப்புக்களுடன் தன்னார்வக் குழுக்களினை ஒருங்கிணைத்தல்.
- தன்னார்வச் சேவையினை தேசியளவில் அங்கீகரித்தல், ஊக்குவித்தல் மற்றும் முறையாகப் பாராட்டுதல்.
- தன்னார்வலர்களின் சுகாதாரம், உயிர் மற்றும் பணிசார் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான தரநிலைகள் மற்றும் தர உத்தரவாதத்தினை உறுதிப்படுத்தும் பொறிமுறையொன்றினை நிறுவுதல்.
- தன்னார்வலர்களினை சேவையில் ஈடுபடுத்தும் நிறுவனக் கட்டமைப்புகள் மற்றும் உட்கட்டமைப்புக்களினைத் திறம்பட டிஜிட்டல்மயமாக்குதல் மற்றும் நவீனமயமாக்குதல்.

## 2. கொள்கையின் தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று

**தொலைநோக்கு**

**“தன்னார்வத் தொண்டின் மூலம் பொதுமக்களின் நல்வாழ்வினையும் மற்றும் சமூக வளர்ச்சியினையும் மேம்படுத்தும் சமூகமொன்றினைக் கட்டியெழுப்புதல்”.**

### பணிக்கூற்று

“இலங்கையில் தன்னார்வத் தொண்டினை அமைப்பு ரீதியாக வலுப்படுத்தி, எந்தவிதமான நிதி அல்லது பிற வெகுமதியிகளினை எதிர்பாராது தங்கள் நேரம், உழைப்பு, அறிவு மற்றும் திறன்களினை அர்ப்பணிக்கும் குடிமக்கள் பங்கேற்பினூடாக சமூகம் மற்றும் தேசிய வளர்ச்சியினை விரைவுபடுத்துதல்.”

### 3. பின்னணி மற்றும் காலத்தின் தேவை

### 3.1 வரலாற்றுப் பின்னணி

தன்னார்வத் தொண்டு என்பது காலங்காலமாக இலங்கையின் கலாசார மற்றும் மத விழுமியங்களில் ஆழமாக வேரூன்றியுள்ள ஒரு பெருமைமிக்க பாரம்பரியமாகும். மகாவம்சம் போன்ற வரலாற்றுச் சான்றுகளின் பிரகாரம், பண்டைய காலத்தில் நிலவிய மதம் மற்றும் கலாசார நடவடிக்கைகளுடன் தொடர்பிலான “தாயக சபை” மற்றும் விவசாய ஒத்துழைப்புக்கான அமுலாக்கப்பட்டுள்ள “வெவ சபை” ஆகியவை இலங்கை வரலாற்றில் காணப்பட்ட ஆரம்பகால தன்னார்வ அமைப்புக்களாகும். 20-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து, இத்துறை வெறும் 'தன்னார்வத் தொண்டு நடவடிக்கைகளை'த் தாண்டி, வளர்ச்சி சார்ந்த அரசுசாரா நிறுவனங்கள் (NGOs) மற்றும் சமூகம் சார்ந்த அமைப்புகள் வாயிலாகப் படிப்படியாக விரிவடைந்துள்ளது.

இலங்கை நீண்ட வரலாற்றையும், மதத்தால் வடிவமைக்கப்பட்ட தன்னார்வச் சேவை மரபையும், அம்மரபினால் செதுக்கப்பட்ட கலாச்சாரத்தையும் கொண்டுள்ளதுடன், இவை, மனித நடவடிக்கைகளின் ஒவ்வொரு அம்சத்திலும் நடைமுறையில் ஊடுருவி நிற்கும் கூறுகளாகும். காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்திருந்தாலும், தன்னார்வச் சேவையில் ஈடுபடுவதற்கான மனிதனின் நாட்டம் மாறாமலே உள்ளது. அனைத்து மதங்களின் நடைமுறைகளும் சடங்குகளும் தன்னார்வச் சேவையில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துகின்றன.

### 3.2 தற்போதைய சவால்களும் மற்றும் காலத்திற்கேற்ற தேவைகளும்.

இக்காலத்தில் பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் வெள்ளம், வறட்சி, நிலச்சரிவு, கடலரிப்பு, தீவிர வானிலை நிகழ்வுகள் மற்றும் அதிகரித்து வரும் வெப்பநிலை உள்ளிட்ட காலநிலை மாற்றம் மற்றும் இயற்கைப் பேரிடர்களின் பாதகமான விளைவுகளுக்கு இலங்கை அதிகளவில் ஆளாகி வருகிறது.

அண்மைக்காலமாக நீண்டகால வறட்சி மாறிவரும் மழைப்பொழிவு முறைகள் நாட்டின் பல பகுதிகளில் விவசாயம், நீர் வளங்கள், உணவுப் பாதுகாப்பு, வாழ்வாதாரம் மற்றும் பொதுச் சுகாதாரம் ஆகியவற்றைப் பாதித்துள்ன. பருவகால வெள்ளம், நிலச்சரிவுகள், உயிரிழப்புக்கள், மக்கள் இடம்பெயர்வு, உட்கட்டமைப்புக்களுக்குச் சேதம் ஏற்படுதல் மற்றும் கணிசமான பொருளாதார இழப்புக்களினை ஏற்படுத்தியுள்ளன. இத்தகைய சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை சார்ந்த சவால்கள், குழந்தைகள், முதியோர்கள், அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட சமூகங்கள் உள்ளிட்ட பாதிக்கப்படக்கூடிய பிரிவினரினை அதிகளவில் பாதித்துள்ளன. எனவே, சமூக மீள்திறன், பேரிடர் தயார்நிலை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் தன்னார்வப் பங்கேற்பினை வலுப்படுத்துதல், உயிர்களினைக் காப்பாற்றுதல், நிலைபேறான அபிவிருத்தியினை ஊக்குவித்தல் மற்றும் இலங்கை முழுவதுமுள்ள சமூகங்களின் நல்வாழ்வினை மேம்படுத்துவதற்கு இது அவசியமாகும்.

இப்பின்னணியினூடாக, குறிப்பாக சமூக மேம்பாடு, பேரிடருக்குப் பிந்தைய முகாமைத்துவ மறுசீரமைப்பு நடவடிக்கைகள், பேரிடர் தயார்நிலைத் திட்டமிடல் மற்றும் சமூக மட்டத்தில் இடம்பெறும் வாழ்வாதார செயற்பாடுகள் போன்ற வேலைத்திட்டங்களுக்கு, பிரதேச ரீதியில் கணிசமான எண்ணிக்கையிலான சமூகப் பணியாளர்கள் பங்கேற்றனர். இருப்பினும் நாட்டில் தன்னார்வத் தொண்டுக்கான ஒருங்கிணைந்த கொள்கை, கட்டமைப்புக்கள் மற்றும் அமைப்புக்கள் இல்லாமையின் காரணமாக நாட்டினுள் தன்னார்வ வேலைத்திட்டங்களினைச் செயற்படுத்துவதில் இரட்டிப்புத் தன்மை ஏற்படுவதற்கு வழிவகுக்கும். பொதுவாகத் தன்னார்வத் துறைக்கும், குறிப்பாக தன்னார்வலர்களுக்கும் ஒரு முறையான அணுகுமுறை இல்லாமையின் காரணமாக அவர்களின் பங்களிப்பு வெளிப்படுவதில்லை.

நாட்டின் தேசியப் பாரம்பரியத்திலிருந்து உரித்தாக்கப்பட்ட நெறிமுறைகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட ஒரு மதம், கலாசாரம் மற்றும் நடத்தையினூடாக வலுப்படுத்தப்பட்ட மனிதநேயக் கொள்கைகளுடன் நெறிமுறை மற்றும் தார்மிக விழுமியங்கள் இத் திட்டத்தினூடாக முன்னெடுக்கப்படுதல் வேண்டும். அத்தகைய நெறிமுறைத் திட்டம், நவீன சமுதாயத்திற்குப் பொருத்தமான மனித இரக்கம், ஒத்துழைப்பு மற்றும் கருணை ஆகியவற்றினால் செம்மைப்படுத்தப்பட்டுப் பேணப்படுதல் வேண்டும் என்பதுடன், தன்னார்வத் தொண்டினூடாக அவை அடையப்படுதல் வேண்டும்.

எனவே, இக்கொள்கையினூடாக இலங்கையின் சமூக, பொருளாதார, அபிவிருத்திக்கான தன்னார்வலர்களின் வளங்கள் மற்றும் வாய்ப்புக்களினை உச்சப்படுத்துவதற்கும், திட்டமிடப்பட்ட இலக்குகளினை அடைவதன் அரசின் முயற்சிகளுக்கும் மேலதிகமான பங்களிப்பினை நல்குவதற்கான சாத்தியமான வரையறையொன்று கிடைக்கும்.

இப்பின்னணியினூடாக இலங்கை, காலநிலை மாற்றம், வெள்ளப்பெருக்கு, வறட்சி, நிலச்சரிவுகள் போன்ற இயற்கை இடர்கள் முதல் வறுமை, போதைப்பொருள் அச்சுறுத்தல் மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகள் வரையிலான பல்வேறு சிக்கலான சவால்களினை எதிர்கொண்டு வருகிறது. இச்சவால்களினை முறியடிப்பதற்கும் மற்றும் பேரிடருக்குப் பிந்தைய முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கும் தன்னார்வப் பணி இன்றியமையாததாக இருந்தபோதிலும், இத்துறையில் பின்வரும் குறைபாடுகள் காணப்படுகின்றன :

- தேசியளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள், கட்டமைப்புக்கள், சட்டக் கட்டமைப்புக்கள் அல்லது அறிக்கை சமர்ப்பிக்கும் வழிமுறைகள் இல்லாமையினால், தன்னார்வப் பணியில் காணப்படும் சிதறிய தன்மை.
- தேசியப் பொருளாதாரத்தில் (மொத்த உள்நாட்டு உற்பத்தி - GDP) தன்னார்வச் சேவையின் பங்களிப்பினைக் கணக்கிடுவதற்கான வழிமுறை இல்லாமை.
- தன்னார்வலர்கள் தொடர்பில் சமூக அங்கீகாரம், பாராட்டுதல் அல்லது நம்பகமான அணுகுமுறை இல்லாமை.

- பாடசாலை/பல்கலைக்கழகக் கல்வினை நிறைவு செய்யும் இளைஞர்களின் இடைக்காலத்தினையும், ஓய்வுபெற்ற முதியோர்களின் அனுபவத்தினையும் தன்னார்வப் பணிக்காகத் திறம்படப் பயன்படுத்துவதற்கான முறையான வழிமுறை இல்லாமை.

4. சட்ட வரைவிலக்கணம

“தன்னார்வச் சேவை” என்பது, மனித நலன் மற்றும் பொதுவான சமூக நன்மைக்காக, எவ்விதமான நிதிசார் அல்லது பொருள்சார் வெகுமதியினையும் எதிர்பாராது, இறுதிப் பயனாளருக்கு எவ்வித மேலதிகச் செலவும் ஏற்படாத வகையிலும் விருப்பத்துடன் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளாகும்.

“தன்னார்வலர்” என்பதன் கருத்து :

அ. விருப்பத்துடன் பணியாற்றுவதற்கு தன்னார்வத்துடன் முன்வரும் மற்றும் இக்கொள்கையில் குறிப்பிட்டுள்ளபடி தன்னார்வத் தொண்டு தொடர்பிலான வரையறைக்கேற்ப செயற்படும் எந்தவொரு குடிமகனும் ;

ஆ. நாட்டில் தங்கியிருப்பதற்கு உரிய அரச அதிகாரிகளின் ஒப்புதலுக்கு உட்பட்டு, தன்னார்வமாகப் பணியாற்றுவதற்கு ஆர்வத்தினைக் காட்டும் மற்றும் இக் கொள்கையில் குறிப்பிட்டுள்ளபடி தன்னார்வத் தொண்டின் வரையறைக்கு ஏற்ப செயற்படுவதற்கு ஆர்வத்தினைக் காட்டும் வேண்டிய வெளிநாட்டு தன்னார்வலரும் ;

“தன்னார்வலர்களை அடிப்படையாகக் கொண்ட/அவர்களினைப் பணிக்கு அமர்த்தும் அமைப்புக்கள்” என்பவை : தன்னார்வலர்கள் மூலம் தங்கள் முதன்மை நோக்கங்களினை அடையும், தங்கள் உரிமையாளர்கள் அல்லது பணிப்பாளர்களுக்கு நிதிசார் நன்மைகளினை (இலாபப் பகிர்வு) வழங்காத, சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட அமைப்புக்களாகும். (அரச நிறுவனங்கள், பிரத்தியேகப் பிரிவின் CSR அலகுகள், இலாப நோக்கற்ற அமைப்புக்கள், அரசு சார அமைப்புக்கள் (NGOs/INGOs), சமூகம்சார்ந்த அமைப்புக்கள், இளைஞர்,/நலன்புரிச் சங்கங்கள் இதில் அடங்கும்.)

## 5. நோக்கம், விசேடமான நோக்கங்கள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்கான காரணங்கள்

### 5.1 நோக்கம்

இலங்கையில் தன்னார்வச் சேவையை வலுப்படுத்துவதற்கும், ஊக்குவிப்பதற்கும் ஏற்ற, ஆதரவான மற்றும் முறையான சூழலை உருவாக்குவதே இக்கொள்கையின் முதன்மை நோக்கமாகும். அதனூடாக தனிநபர்களின் நேரம், அறிவு மற்றும் திறன்களினைச் சமூகத்திற்கு தாமாகவே முன்வந்து பங்களிப்புச் செய்வதை ஊக்குவிப்பதன் மூலம், வலுவான மற்றும் ஒருங்கிணைந்த தன்னார்வத் துறையொன்றினைக் கட்டியெழுப்புவது இதன் நோக்கமாகும். அதேபோல, இத்தகைய பங்களிப்பினை அதிகப்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரம், சமூகம் மற்றும் அரசியல் வளர்ச்சி மற்றும் சமூக நலனினை மேம்படுத்துவதற்கு தன்னார்வச் சேவையினை ஒரு முக்கியமான கருவியாகப் பயன்படுத்துவதும் இக்கொள்கையின் நோக்கமாகும்.

### 5.2 விசேடமான நோக்கங்கள்

1. இலங்கையில் தன்னார்வச் சேவைக்கான தேசியக் கொள்கை, சட்ட மற்றும் நிறுவனக் கட்டமைப்பினை வடிவமைத்தல் மற்றும் வலுப்படுத்துதல்.
2. தன்னார்வச் சேவைகளினைத் திறம்பட நிர்வகித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணிப்பதற்கான ஒரு மையப்படுத்தப்பட்ட பொறிமுறையொன்றினை நிறுவுதல்.

3. தேசியத் தன்னார்வத் தொண்டு ஒழுக்கவிழுமியக் கோவை (Code of Ethics) மற்றும் தரநிலைகளினை அறிமுகப்படுத்துதல்.
4. அரச, பிரத்தியேக, சிவில் சமூகம் மற்றும் கூட்டுத்தானப் (Corporate) பிரிவுகள் முழுவதும் தன்னார்வப் பங்கேற்பினை விரிவுபடுத்துதல்.
5. பயன்படுத்தப்படாத மனித வளம், ஓய்வுபெற்றோரின் அறிவு மற்றும் இளைஞர்களின் திறமைகளினை விளைத்திறனாக தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளுக்காகப் பயன்படுத்துதல்.
6. தன்னார்வச் சேவை தொடர்பிலான ஆராய்ச்சி, தரவு சேகரிப்பு, புத்தாக்கம் மற்றும் சிறந்த நடைமுறைகளினை (Best Practices) ஊக்குவித்தல்.
7. தன்னார்வலர்களின் அடையாளத்தினை உறுதிப்படுத்தி அவர்களின் பங்களிப்பினைத் தேசியளவில் மதிப்பீடு செய்வதற்கும் மற்றும் அங்கீகரிப்பதற்கும் வழிமுறைகளினைத் தயாரித்தல்.

## 5.3 எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்கான காரணங்கள்

இலங்கை தற்போது பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் பல சவால்களை எதிர்கொண்டு வருகிறது. அவற்றினுள், வறுமை ஒழிப்பு, சிறுவர் தொடர்பிலான விடயங்கள், திறன் மேம்பாடு, சமூகத்தில் மீள ஒருங்கிணைதல் மற்றும் நல்லிணக்கம், பல சவால்களுக்கு முகங்கொடுக்கும் இளைஞர் சமூகம், தனிப்பெற்றாரினைக் கொண்ட குடும்பங்கள், பெண்களினை வலுவூட்டுதல், எய்ட்ஸ், டெங்கு மற்றும் அதுபோன்ற நோய்களை எதிர்த்துப் போராடுதல், பொருளாதார வளர்ச்சிக்காக அறிவைப் பயன்படுத்துதல், ஆட்கடத்தலைத் தடுத்தல், போதைப்பொருள் அடிமைகளை மறுவாழ்வளித்தல், உணவு மற்றும் விவசாயத்தை மேம்படுத்துதல், தொழில்நுட்பப் பயன்பாட்டை அதிகரித்தல், சுகாதாரம் மற்றும் துப்புரவு வசதிகளை மேம்படுத்துதல், நீர் வள முகாமைத்துவம், சுற்றுச்சூழல் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி, வீடமைப்பு மேம்பாடு போன்ற பிரிவுகள் பிரதானமானவையாகும். இச்சூழலில், தன்னார்வப் பணியின் பங்களிப்பு உன்னதமாகும். இச்சவால்களினை முறியடிப்பதற்கு நாட்டிற்குள் தன்னார்வச் சேவையில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுள்ளவர்களின் விலைமதிப்பற்ற பாரிய பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும். பயன்படுத்தப்படாத இந்த மனிதவளத்தை திறம்படப் பயன்படுத்திக்கொள்ள ஒரு முறையான அணுகுமுறையைக் கையாள்வது காலத்தின் தேவையாகும். அதற்கேற்ப, தன்னார்வச் சேவையை முறைப்படியான, பொறுப்பான மற்றும் நிலையான முறையில் மேம்படுத்துவதற்கான ஒரு தேசியக் கொள்கை கட்டமைப்பை உருவாக்குவது காலத்திற்கு ஏற்ற நடவடிக்கையாகும்.

## 6. கொள்கைசார் இலக்குகள் மற்றும் முக்கிய துறைகள்

### 6.1 அரச பிரிவு

- சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களினூடாக அரச சேவையினை வலுப்படுத்துவதற்கு தன்னார்வலர்களின் பங்களினைப் பெற்றுக்கொள்வதற்கு முறைசார் வழிமுறையினை அறிமுகப்படுத்துதல்.

### 6. 2. தனியார் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட பிரிவு

- நிறுவனங்களின் ஊழியர்களுக்கு விசேட சந்தர்ப்பங்களிலும் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நாட்களிலும் தன்னார்வத் தொண்டுகளில் ஈடுபடுவதற்கான தன்னார்வப் பணிக்கான விடுமுறை (Volunteer Leave) அல்லது வாய்ப்புக்களினை வழங்குதல்.
- நிறுவனங்களின் சமூகப் பொறுப்புணர்வு (CSR) நிதியங்கள் மற்றும் செயற்றிட்டங்களினை, தேசியத் தன்னார்வலர் கொள்கைக் கட்டமைப்புடன் ஒருங்கிணைத்தல்.
- பிரத்தியேகத் துறையில் தன்னார்வத் தொண்டில் ஈடுபட்டுள்ளவர்களின் பணிசார் பாதுகாப்பினை உறுதி செய்தல் மற்றும் விபத்துக்கள்/பேரிடர்களின்போது இழப்பீடு மற்றும் நிவாரணம் வழங்குவதற்கான வழிமுறைகளினை ஏற்படுத்துதல்.

### 6.3 தன்னார்வப் பங்களிப்பு வழங்கப்படும் முக்கியமான அபிவிருத்தித் துறைகள்.

- சுகாதாரம் மற்றும் தூய்மை
- கல்வி, இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு
- பேரிடர் தயார்நிலை, தணிப்பு மற்றும் முகாமைத்துவம்
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வனவியல் மற்றும் பருவநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளல்..
- விவசாயம், உணவுப் பாதுகாப்பு மற்றும் நீர் வள முகாமைத்துவம்
- சமூக ஒருங்கிணைப்பு, நல்லிணக்கம், சமூக சேவை மற்றும் நலன்புரி
- தொழில்நுட்ப வளர்ச்சி, மொழி மற்றும் சைகை மொழிபெயர்ப்பு
- போதைப்பொருள் தடுப்பு மற்றும் போதைக்கு அடிமையானவர்களினைப் புனர்வாழ்வளித்தல்.
- தன்னார்வச் சேவையினூடாக, மனித நலனுக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கக்கூடிய பிற துறைகள்.

### 6.4 தன்னார்வத் தொண்டினை வகைப்படுத்துதல்.

- இளம் தன்னார்வலர்கள் - தேசிய இளைஞர் கொள்கையில் குறிப்பிட்டுள்ளவாறு 15-29 வயதிற்கிடைப்பட்ட இளைஞர் யுவதிகள்.
- ஓய்வு பெற்ற தன்னார்வலர்கள் - முறையான வேலையிலிருந்து ஓய்வுபெற்றவர்கள் தாமாகவே முன்வந்து தமது சேவைகளினை வழங்குதல்.
- நிகழ்நிலை (Online) தன்னார்வலர்கள் - நவீன தகவல்கள் மற்றும் தொடர்பால் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி தன்னார்வ சேவைகளினை வழங்கும் தனிநபர்கள் அல்லது குழுக்கள்.
- நிறுவன அடிப்படையிலான தன்னார்வலர்கள் - அமைப்புக்கள் அல்லது நிறுவனங்கள் மூலம் தன்னார்வ சேவைகளினை வழங்கும் தனிநபர்கள் அல்லது குழுக்கள்.
- சர்வதேச தன்னார்வலர்கள் - இலங்கையில் தன்னார்வ சேவைகளினை வழங்கும் இலங்கையரல்லாதவர்கள் வெளிநாடுகளில் தன்னார்வ சேவைகளினை வழங்கும் இலங்கையர்கள்.
- புலம்பெயர் தன்னார்வலர்கள் - தன்னார்வ சேவைகளினை வழங்குவதற்காக இலங்கைக்கு வருகைதரும் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கை குடிமக்கள்.
- சமூக அடிப்படையிலான தன்னார்வலர்கள் - தமது சமூகங்களுக்குள் முறைசாரா (informal) தன்னார்வ நடவடிக்கைகளில் ஈடுபடும் தனிநபர்கள் அல்லது குழுக்கள்.
- சிறுவர் மற்றும் இளைஞர் தன்னார்வலர்கள் - முதியோரின் அல்லது நிறுவனமொன்றின் வழிகாட்டுதலின் கீழ் 18 வயதிற்கும் குறைவான இலங்கையர்கள் தன்னார்வ நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
- அரசின் தன்னார்வ வேலைத்திட்டங்களில் ஈடுபட்டுள்ள நபர்கள்
- சாரணர் இயக்கம், இளைஞர் சமூகங்கள், கேடட் படை மற்றும் செஞ்சிலுவைச் சங்கம்.
- தொழில்முறை தன்னார்வலர்கள் - பல்வேறு துறைகளில் முறைசார்ந்த பணியில் ஈடுபட்டிருக்கும் அதேவேளையில், பகுதிநேர அடிப்படையில் தாமாகவே முன்வந்து தங்கள் சேவைகளினை வழங்கும் நபர்கள்.
- பதிவு செய்யப்பட்ட தன்னார்வ அமைப்புக்கள்
- முப்படைகள், காவல்துறை மற்றும் சிவில் பாதுகாப்புப் படையின் உறுப்பினர்கள்.

## 7. தேசிய தன்னார்வச் செயற்பாடுகளுக்கான தேசிய செயலகம்

இலங்கையில் வலுவான, வெளிப்படையான மற்றும் நிலைபேறான தன்னார்வச் சேவைகள் திட்டமொன்றினைக் கட்டியெழுப்புதல் மற்றும் ஒருங்கிணைப்பதற்கு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் கீழ், "தேசிய தன்னார்வச் செயற்பாடுகள் தொடர்பிலான செயலகம்" **(National Volunteering**

**Secretariat - NVS) அமைக்கப்பட்டுள்ளது. இதன் நிர்வாகம் மற்றும் கொள்கைசார் தீர்மானத்தினை எடுப்பதற்காக "முகாமைத்துவச் சபை"** (Management Board) நிறுவப்பட்டுள்ளது.

### 7.1 முகாமைத்துவச் சபையின் அமைப்பு (வாக்களிக்கும் உரிமை கொண்ட உறுப்பினர்கள்)

1. **தவிசாளர்:** விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் அல்லது செயலாளரினால் நியமிக்கப்படும் மேலதிக செயலாளர் அல்லது அப்பதவிக்கு இணையான பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர்.
2. **முகாமைத்துவச் சபையின் ஒருங்கிணைப்பாளர்/செயலாளர் : தேசிய தன்னார்வச் செயற்பாடுகள் தொடர்பிலான செயலகத்தின்** (NVS) தலைவர்.
3. **விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் அவ்வமைச்சின் சிரேஸ்ட உறுப்பினர் (மேலதிக செயலாளர்/பணிப்பாளர்).**
4. **பின்வரும் நிறுவனங்களின் தலைவர்களினால் நியமிக்கப்படும் மூத்த அதிகாரி ஒருவர் என்றவாறு :**

    - பொதுத் திறைசேரி (Treasury)
    - சமூக சேவைகள் திணைக்களம்
    - அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்
    - முதியோர்களுக்கான தேசிய செயலகம்
    - முப்படைகள், காவல்துறை மற்றும் சிவில் பாதுகாப்புப் படை

5. பின்வரும் அமைச்சுக்களின் மேலதிக செயலாளர் அல்லது பணிப்பாளர் நிலையிலுள்ள பிரதிநிதி ஒருவர் (என்றவாறு) :

    - இளைஞர் விவகார அமைச்சு
    - கல்வி அமைச்சு
    - சுகாதார அமைச்சு
    - சுற்றாடல் அமைச்சு

### 7.2 கண்காணிப்பாளர் மற்றும் ஆலோசனை வழங்கும் மட்டத்திலுள்ள உறுப்பினர்கள்.

- **ஆலோசகர்:** விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்.
- அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பிலான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் அல்லது சிரேஸ்ட பிரதிநிதி ஒருவர்.
- இலங்கை வர்த்தக சபையின் (Chamber of Commerce) தலைவர் அல்லது சிரேஸ்ட பிரதிநிதி ஒருவர்.
- விடயத்திற்குப் பொறுப்பான செயலாளரினால் அழைக்கப்படும் சிவில் சமூக பிரதிநிதிகள் இருவர் (02).
- ஐக்கிய நாடுகளின் தன்னார்வலர்கள் அமைப்பின் (UNV) சிரேஸ்ட உறுப்பினர் ஒருவர்.
- குடிசன மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்தின் சிரேஸ்ட உறுப்பினர் ஒருவர்.
- இளைஞர் அமைப்பு/அரச சாரா அமைப்பின் (NGO) மூத்த உறுப்பினர் ஒருவர் மற்றும் ஆராய்ச்சி நிறுவனமொன்றின் பிரதிநிதி ஒருவர் என்றவாறு.

### 7.3 தன்னார்வச் செயற்பாடுகள் தொடர்பிலான செயலகத்தின் கட்டமைப்பு.

தன்னார்வச் செயற்பாடுகள் தொடர்பிலான செயலகத்தின் பணிகளினைத் திறம்பட நிறைவேற்றுவதற்குப் பொருத்தமான பணிப்பாளர் ஒருவர் மற்றும் உதவி உத்தியோகத்தர்கள் குழாமினைக் கொண்ட அலுவலகமொன்றினை அமைத்தல்.

### 7.4 அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களினை தன்னார்வப் பணிக்காக விடுவித்தல்.

தேவையான தருணங்களில் அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களினை தன்னார்வத் தொண்டுக்கு விடுவித்தல் இடம்பெறுகிறது. இலங்கை தன்னார்வச் செயற்பாடுகள் தொடர்பிலான தேசிய செயலகத்தின் சேவைச் செயற்பாடுகளினை முறைசார்வகையில் முன்னெடுத்துச் செல்வதற்கு, சேவை தேவைப்படும் அவசர சூழ்நிலைகளில், செயலகம் நிறுவப்பட்டுள்ள அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் கடமையாற்றும் சகல வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் திருத்தப்பட்ட தேசியக் கொள்கையின் இலக்கம் 6.3 இன் ஊடாக எடுத்துக் காட்டப்பட்டுள்ள தன்னார்வப் பங்களிப்புக்களுக்கு கவனம் செலுத்தப்படவேண்டிய பிரதான பிரிவுகளின் கீழ் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களின் சேவையினைப் பெற்றுக் கொள்ளல்.

முகாமைத்துவக் குழுவினை நியமிக்கும்போது, அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சம வாய்ப்புக்களினை வழங்குதல், பாலினச் சமநிலை (Gender Balance) மற்றும் இனச் சமநிலையினைப் பேணுவதும் கட்டாயமாகும்.

## 7.4 தேசிய தன்னார்வச் செயற்பாடுகள் தொடர்பிலான செயலகத்தின் அடிப்படைச் செயற்பாடுகள்

- தன்னார்வத் தொண்டு நடவடிக்கைகளினைப் பதிவு செய்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணிப்பதற்கு புதிய தன்னார்வ முகாமைத்துவ முறைமையொன்றினை அமைத்தல்.
- பல்வேறு துறைகளில் அறிவு, திறன்கள் மற்றும் அனுபவம் கொண்ட தன்னார்வலர்களின் தரவுத்தளத்தினைப் பராமரித்தல் மற்றும் அவர்களினை தேசிய தன்னார்வச் செயற்பாடுகள் செயலகத்தில் பதிவு செய்தல்.
- வாரமொன்றுக்கு 20-30 மணிநேர வேலை நேரத்தினை உள்ளடக்குமாறு முறைசார் தன்னார்வ சேவைகளுக்கான தன்னார்வ ஒப்பந்தமொன்றினை (Volunteer Agreement) வழங்குதல்.
- தன்னார்வலர்களின் பாதுகாப்பு, நலன்புரி மற்றும் சேவைத் தரத்தினை உறுதிசெய்வதற்குத் தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் விதிமுறைகளினைத் தயாரித்து வெளியிடுதல்.
- சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்பட்டு தன்னார்வலர்கள் தொடர்புபடும் அமைப்புக்களின் (Volunteer Involving Organizations) தகவல்களினைக் கொண்ட பதிவேட்டினைப் பேணுதல் மற்றும் நாளதுவரைப்படுத்துதல்.
- தன்னார்வ முகாமைத்துவத் திட்டத்தினூடாக கிடைக்கும் வாய்ப்புக்களுக்கு தன்னார்வலர்களினைப் பரிந்துரைத்தல் மற்றும் அவர்களின் பணி முன்னேற்றத்தினைக் கண்காணித்தல்.
- ஒரு அமைப்பு, செயற்றிட்டம் அல்லது நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் தன்னார்வமாக (அதாவது எவ்வித நிதியினையும் அறவீடு செய்யாது) பணியினை நிறைவு செய்த நபர்களிடமிருந்து அப் பணி தொடர்பிலான கருத்துக்கள், முன்மொழிவுகள் மற்றும் புகார்கள்/பின்னூட்டல் செயற்பாடுகளினைப் பெற்றுக்கொள்ளல்.
- நிறைவு செய்யப்பட்ட பணிகளின் தகவல்களினைத் தரவுத் திட்டத்தினுள் உள்ளடக்குதல்.
- தன்னார்வச் செயற்பாடுகளுக்கான குறைந்த பட்ச பங்களிப்பு அளவுகள் குறித்த அறிக்கைகளினைத் தயாரித்தல்.
- குடிசன மற்றும் புள்ளவிவரத் திணைக்களம் மற்றும் பிற உரிய நிறுவனங்களுடன் தரவுகளினைப் பரிமாறுதல்.
- தேவையான தருணங்களில் தன்னார்வத் தொண்டு தொடர்பிலான அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல்.
- பங்குதாரர்களுடன் இருதரப்பு மற்றும் பல தரப்புக் கூட்டங்களினை ஏற்பாடு செய்தல்.

- நாட்டிற்குள் தன்னார்வச் சேவையை முறைப்படுத்துவதற்கு உதவும் அமைப்புக்களுடன் தொடர்ச்சியான தொடர்பினைப் பேணுதல்.
- தன்னார்வலர்களின் பங்கேற்பினைப் பயன்படுத்துவதன் மூலம் பொதுச் சேவைகளினை மேம்படுத்துவதற்கு அரச நிறுவனங்களினை வலுவூட்டுதல்.
- மனித நல்வாழ்வுக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய பிற நிறுவனங்கள் மற்றும் துறைகளின் உதவியினைப் பெற்றுக்கொள்ளல்.
- தேவைப்படும்வேளையில் நிபுணர்களிடமிருந்து ஆலோசனை சேவைகளினைப் பெற்றுக்கொள்ளல்.

## 8. செயற்பாட்டு நடைமுறை மற்றும் முக்கிய செயற்பாடுகள்

தேசிய தன்னார்வச் செயற்பாடுகள் தொடர்பிலான செயலகத்தினால் (NVS) பின்வரும் அடிப்படைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. டிஜிட்டல் முகாமைத்துவத் திட்டம் : தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் தன்னார்வ அமைப்புக்களினை (VIOs) பதிவு செய்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணிப்புத் தொடர்பில் தேசிய டிஜிட்டல் தரவுத் தளமொன்றினை (Online Portal) முன்னெடுத்தல். (இப்பதிவு எந்தவொரு தரப்பினருக்கும் சட்டபூர்வ உரிமைகளினையோ அல்லது பிணைப்புக்களினையோ ஏற்படுத்தாது.)
2. அரச உத்தியோகத்தர்களினை இணைப்புச் செய்தல் : அவசரகாலப் பேரிடர்கள் அல்லது விசேட தேவைகள் எழும்வேளையில் செயலகத்தின் செயற்பாடுகளுக்கு, அரச நிறுவனங்களின் வெளிக்கள உத்தியோகத்தர்களினை விடுவித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
3. கல்விப் பாடத்திட்டம் : பாடசாலை, உயர்கல்வி மற்றும் பல்கலைக்கழக விடயப் பரிந்துரைகளில் தன்னார்வச் சேவையினை முறையாக உள்ளடக்குதல் மற்றும் சாரணர் இயக்கம், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற மாணவர் அமைப்புக்களின் செயற்பாடுகளினை விரிவாக்குதல்.
4. தரவுப் பரிமாற்றம் மற்றும் ஆராய்ச்சி : தன்னார்வச் சேவையின் பொருளாதார மதிப்பினைக் கணக்கிடுவதற்கு குடிசன மற்றும் புள்ளவிவரத் திணைக்களத்துடன் தரவுகளினைப் பரிமாறுதல் மற்றும் ஆராய்ச்சிகளினை வலுவூட்டுதல்.

## 9. தன்னார்வத் தொண்டு ஒப்பந்தம், உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்

### 9.1 தன்னார்வத் தொண்டு உடன்படிக்கை/ஒப்பந்தம்

வாரத்திற்கு ஆகக்குறைந்தது 20 மணிநேரம் முறைசார் தன்னார்வப் பணியில் ஈடுபடும் நபர்களுக்கு NVS தேசிய தன்னார்வத் தொண்டு செயலகத்தினூடாக முறையான தன்னார்வ சேவை ஒப்பந்தமொன்று/உடன்படிக்கையொன்று வழங்கப்படுகிறது.

- இவ் ஒப்பந்தத்தினூடாக நிரந்தர அடிப்படையில் அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் இயலாது என்பதையும், அது தொடர்பில் எவ்வித சட்டபூர்வமான எதிர்பார்ப்பையும் இது உருவாக்காது என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
- அடிப்படை வாழ்க்கைச் செலவுகளினை ஈடுசெய்வதற்கான கொடுப்பனவு, அத்தகைய கொடுப்பனவு, குறித்த விபரம் ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பின் மட்டுமே வழங்கப்படும். அரசாங்கம் நிர்ணயித்துள்ள குறைந்த பட்ச ஊதிய விகிதங்களின் அடிப்படையில், பணிபுரிந்த மணிநேரங்களினைக் கணக்கில் கொண்டே இத்தொகை கணக்கிடப்படுதல் வேண்டும். அரச நிதியினைப் பயன்படுத்துவதாயின் பொதுத் திறைசேரியின் முன் அங்கீகாரம் பெறுவது கட்டாயமாகும்.

### 9.2 தன்னார்வலர்களின் உரிமைகள்

- பாதுகாப்பான, கண்ணியமான மற்றும் உகந்த பணிச்சூழலினைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை.
- ஒப்பந்தம் செய்துள்ளவாறு உரிய செலவுகளினைத் திரும்பப் பெறுவதற்கான உரிமை.

- நிறைவேற்றிய பணிகளுக்காக தேசியளவில் அங்கீகரிக்கப்பட்ட எழுத்துமூலமான சான்றிதழொன்று அல்லது பாராட்டுச் சான்றிதழினைப் பெறும் உரிமை,
- பணிகளினைத் திறம்படச் செய்வதற்குத் தேவையான பயிற்சி, தொழில்முறை வழிகாட்டுதல் மற்றும் ஒத்துழைப்பினைப் பெறும் உரிமை.
- தனிநபர் தரவுகள் மற்றும் இரகசியத்தன்மையினைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமை.

### 9.3 தன்னார்வலரின் பொறுப்புகள்

- ஏற்கப்பட்ட பணிகளினை, நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள், பொறுப்புடனும், திறமையுடனும் மற்றும் தொழில்முறைத் தரங்களுடனும் நிறைவேற்றுதல்.
- NVS ஊடாக நடாத்தப்படும் பயிற்சிகள், கூட்டங்கள் மற்றும் அறிமுக (Orientation) நிகழ்ச்சிகளில் கட்டாயமாகப் பங்கேற்றல்.
- சமூகத்தின் கலாசார, மத, பாரம்பரிய மற்றும் இனப் பன்முகத்தன்மையினை மதித்து பொதுவான நடத்தை விதிகளினைப் பின்பற்றுதல்.

## 10. தேசிய தன்னார்வச் சேவை நிதியம்

தன்னார்வச் சேவையினை ஊக்குவித்தல் மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கான முறையான "தேசியத் தன்னார்வச் சேவை நிதியம்" ஒன்று நிறுவப்படுகிறது. இந்நிதியத்தின் சகல வருவாய் செலவு மற்றும் நிதிநிலைக் கூற்றுக்களுக்கு, முகாமைத்துவச் சபையின் முன் அனுமதி பெறப்படுதல் வேண்டும் என்பதுடன், அரசின் கண்காய்வுக்குக் கட்டாயமாக உட்படுத்துதல் வேண்டும்.

### 10.1 நிதி ஆதாரங்கள்

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மானியங்கள், நன்கொடைகள், இருதரப்பு உதவிகள் மற்றும் நிறுவன அனுசரணைப் பங்களிப்புகள்.
- நிதியத்திற்குப் பங்களிப்பினை வழங்கும் நபர்களுக்கு மற்றும் நிறுவனங்களுக்கு அதன் அங்கத்துவத்தினை வழங்குவதன் நடைமுறைகள்.

### 10.2 நிதியத்தினைப் பயன்படுத்துவதற்கான அங்கீகரிக்கப்பட்ட நோக்கங்கள்

1. செயற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவுகள் : செயலகத்தின் நிர்வாக மற்றும் ஒருங்கிணைப்புச் செலவுகளினை ஈடுசெய்தல்.
2. நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வளங்களினை வழங்குதல் : தன்னார்வச் செயற்றிட்டங்களுக்குத் தேவையான கருவிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்களினை வழங்குதல்.
3. பயிற்சி மற்றும் திறன் விருத்தி : தன்னார்வத் தொண்டர்களுக்கான பயிற்சி அமர்வுகள், திறன் விருத்திப் பட்டறைகளினை ஒருங்கிணைத்தல்.
4. சமூகத் தொடர்பு மற்றும் விளம்பரம் : புதிய ஊழியர்களினை ஆட்சேர்ப்புச் செய்தல், விழிப்புணர்வு மற்றும் தொடர்பாடல் செயற்பாடுகள்.
5. போக்குவரத்து மற்றும் வழங்கல்கள் : பொருட்கள் மற்றும் பணியாளர்களினைக் கொண்டு செல்வதற்கான செலவுகளினை ஈடுசெய்தல்.
6. பாதுகாப்பு மற்றும் காப்பீடு : தன்னார்வலர்களுக்குக் காப்பீட்டு வசதி (Insurance), முதலுதவி மற்றும் பாதுகாப்பு உபகரணங்களினைப் பாதுகாத்து வைத்தல்.
7. தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் : முகாமைத்துவத் தரவுத் திட்டங்கள், இணையத்தளங்கள் மற்றும் தொழில்நுட்பக் கருவிகளினை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.

## 11. சட்டமியற்றல், நடைமுறைப்படுத்தல் மற்றும் மீளாய்வு செய்தல்.

### 11.1 சட்டமியற்றல்

இக்கொள்கையின் விதிகளினை சட்டப்பூர்வமாக அமுலாக்குதல் மற்றும் தன்னார்வத் துறையினை ஒழுங்கமைப்பதற்கும் சட்டங்களினை, பாராளுமன்றமூடாக வடிவமைப்பதற்கு அரச நடவடிகை எடுக்கும். அது தொடர்பிலான ஒழுங்கு விதிகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் வெளியிடப்படும்.

### 11.2 அமுலாக்குதல்

இத் தேசியக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு, உரிய சகல அரச, பிரத்தியேக மற்றும் சிவில் சமூகத்தினைச் சேர்ந்த தரப்பினர்களின் கருத்துக்களினை கருத்திற்கொண்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சினால் விரிவான "தேசிய செயற்றிட்டம்" (National Action Plan) தயாரிக்கப்படுதல் வேண்டும்.

### 11.3 கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

கொள்கையின் முன்னேற்றம் மற்றும் தன்னார்வச் செயற்பாடுகளின் தரத்தினைத் தொடர் தேர்ச்சியாகக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் தேசிய தன்னார்வச் செயற்பாடுகள் தொடர்பிலான செயலகத்தினூடாக (NVS) இடம்பெறும்.

### 11.4 கொள்கைத் திருத்தம்

மாறிவரும் சமூக-பொருளாதாரச் சூழலுக்கேற்ப, இத்தேசியக் கொள்கையானது ஒவ்வொரு மூன்று (03) ஆண்டுகளுக்கு ஒரு முறையோ அல்லது முகாமைத்துவச் சபையினால் தீர்மானிக்கப்படும் பொருத்தமான காலவரையறையிலோ முறையாக மீளாய்வு செய்யப்பட்டுத் திருதப்படுதல் வேண்டும்.